# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.66 /2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 3 | நாள் | : | 02.09.2025 |
| பெயர் | : | சிவஞானபாண்டியன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 02nd day of September 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் நெல்கட்டும்செவலில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளையும் இன்று ஆஜராகத எதிரிகளையும் தெரியும். எங்கள் ஊரில் காளியம்மன் கோவில் உள்ளது. அதில் நாள்கால் நடும் நாளில் பிரச்சனை ஏற்பட்டது. சுமார் 7 , 8 அல்லது 9 வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊரில் நாள்கால் நடும் நாளில் பிரச்சனை ஏற்பட்டது. எங்கள் ஊரில் உள்ள காளியம்மன் கோவிலில் நாள் கால் நடுவதற்காக சென்றபோது பிரச்சனை ஏற்பட்டது. அதற்கு முன்பு 7 , 8 வருடம் கோவில் விழா நடக்காமல் இருந்தது. கோமதி முத்துராணி தனக்கு முதல் மரியாதை வேண்டுமென்று கேட்டு வந்தார். அதற்கு நாங்கள் மறுப்பு தெரிவித்து நீதிமன்றம் சென்றோம். நீதிமன்றம்

யாருக்கும் முதல் மரியாதை கிடையாது என்று கூறிவிட்டது. அரசு அலுவலர்கள் கோவில் நிர்வாகம் சம்பந்தமாக நாள்கால் நட வந்திருந்தார்கள். நீதிமன்ற உத்தரவுப்படி வந்திருந்தார்கள். காலை 7 முதல் 7.30 மணிமுதல் நாங்கள் நாள்கால் நடுவதற்கு காளியம்மன் கோவிலில் கூடியிருந்தோம். அங்கு நாள்கால் நடப்பட்டது. அங்கிருந்து புறப்பட்டு மேற்கேயுள்ள உள்ள தெரு வழியே தெற்கு நோக்கி வந்தோம். எதிரிகள் எதிர் திசையில் வந்தார்கள். அரிவாள் கம்புடன் வந்தார்கள். எங்களை கூப்பிடாமல் எப்படி நாள்கால் நட்டினீர்கள் என்று சத்தம்போட்டார்கள். சுந்தரய்யா தேவர் மகன் பூலுடையார் என்பவர் என்னை அரிவாளால் வெட்டினார் என் இடது தோள்பட்டையில் கழுத்திற்கு கீழ் வெட்டினார். பூலுடையார் மனைவி எனது இடது காலில் கம்பால் அடித்தார். பூலுடையார் மகன் அரிவாளைக் கொண்டு இடது கையில் அரிவாளால் வெட்டிவிட்டார். இன்றோடு தொலைந்து போங்கள் என்று கூறி திட்டினார்கள். பாண்டியராஜா, உள்ளமுடையார், அசோகன், மாரித்துரை, ஆகியோர்களுக்கும் காயம் ஏற்பட்டது. 108 ஆம்புலன்ஸ் மூலம் புளியங்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். போலீசார் மருத்துவமனையில் வைத்து எங்களை விசாரித்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை இல்லை</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.09.02 17:24:56 +0530

DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No.66 /2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 2 | நாள் | : | 02.09.2025 |
| பெயர் | : | உள்ளமுடையார் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 02nd day of September 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை

நான் தற்போது நெல்கட்டும் செவலில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளையும் இன்று ஆஜராகத மற்ற எதிரிகளையும் தெரியும். எங்கள் ஊருக்கு வடக்கே காளியம்மன் கோவில் உள்ளது. அது ஊருக்கு பொது கோவிலாகும். அந்த கோவிலில் சித்திரை மாதம் விழா நடக்கும். கோமதி முத்துராணி என்பவர் அந்த கோவில் கொடை விழாவில் தனக்கு முதல் மரியாதை தரவேண்டுமென்று பிரச்சனை செய்து வந்தார். சம்பவம் நடப்பதற்கு 4 வருடங்களுக்கு முன்பாக இருந்தே பிரச்சனை இருந்து வந்தது. நாங்கள் ஊரிலிருந்து முதல் மரியாதை தரவேண்டாம் என்று கூறியதால் பிரச்சனை இருந்தது. முதல் மரியாதை கொடுக்க கூடாதென்று பாண்டியராஜாவும் நீதிமன்றம் சென்றார்.

கோமதி முத்துராணியும், முத்தையா தேவர் மகன் வெள்ளத்துரையும் நீதிமன்றம் சென்றார்கள். முதல் மரியாதை யாருக்கும் கிடையாது ஊர்மக்கள் திருவிழாவை நடத்தலாம் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. சித்திரை மாதம் 2வது செவ்வாய்கிழமை நாள்கால் நட முடிவு செய்யப்பட்டது. இந்து அறநிலைய துறை அலுவலர்கள் நாள்கால் நட வந்திருந்தார்கள். அவ்வாறு நாள்கால் நட முடிவு செய்து காலை 8.30 மணியளவில் நாள்கால் நடும் நிகழ்ச்சி முடிவடைந்தது. எங்கள் ஊரில் உள்ள காளியம்மன் கோவிலில் உள்ள உள்புறம் மேற்கே நாள்கால் நடப்பட்டது. அங்கு ஊர் மக்கள் அனைவரும் கூடியிருந்தார்கள். கோவிலுக்கு மேற்கேயுள்ள தெரு வழியே புறப்பட்டோம். கோமதி முத்துராணி தரப்பினர் அரிவாள் கம்புடன் எதிர்தார்போல் வந்தார்கள். முதல் மரியாதை தராமல் எப்படி நாள்கால் நடலாம் என்று கூறிக்கொண்டு வந்தவர்கள் எங்களை தாக்கினார்கள் சண்முகையா தேவர் மகன் உள்ளமுடையார் என்பவர் கம்பால் என் இடது கையில் அடித்தார். எனக்கு கை ஒடிந்துவிட்டது. நான் புறப்பட்டு தப்பியோடிய போது சண்முகையா தேவர் மகன் முருகையா என்பவர் என் தலையில் கம்பால் அடித்தார். எனக்கு தலைச்சுற்றல் வந்து அருகில் உள்ள வாராங்காலில் விழுந்துவிட்டேன். நான் செத்துப்போய்விட்டேன் என்று விட்டுவிட்டு போய்விட்டார்கள். எனக்கு சுயநினைவு திரும்பி பார்த்தபோது வெள்ளத்துரை, பாண்டியராஜா, முத்துப்பாண்டி, மாரிச்சாமி, உட்பட 7 நபர்கள் காயத்துடன் நின்று கொண்டிருந்தார்கள். பின்னர் போலீசார் வந்தார்கள். அதன்பின் நாங்கள் புளியங்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு போலீசார் வந்து

விசாரித்து எழுதினார்கள். நாங்கள் மருத்துவமனையில் இருந்தபோது எழுதிக் கொண்டார்கள். ஆம்புலன்ஸ் வாகனத்தில் ஆஸ்பத்திரிக்கு போனோம்.

**குறுக்குவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.09.02 17:25:01 +0530